# இணைப்பு - 2.2

## 7.4.98 அன்று மாலை 3 மணி அளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற முதல்நிலைக் குழுவின் இரண்டாவது கூட்ட நடவடிக்கை குறிப்பு.

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்குவது குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட முதல் நிலைக் குழுவின் இரண்டாவது கூட்டம் 7.4.98 அன்று மாலை 3 மணியளவில் தலைமைச் செயலகம், பிரதானக் கட்டிடத்திலுள்ள கூட்ட அறையில் மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) மற்றும் குழுவின் அமைப்பாளர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் கீண்கண்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

| | |
|---|---|
| 1.திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர் | தி.மு.க. |
| 2.திரு.பரமத்தி சண்முகம் | தி.மு.க. |
| 3.திரு.கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர் | த.மா.கா. |
| 4.திரு.என்.ஆர்.அழகராஜா, சட்டமன்ற உறுப்பினர் | த.மா.கா. |
| 5.திரு.சொ.கருப்பசாமி, சட்டமன்ற உறுப்பினர் | அ.இ.அ.தி.மு.க. |
| 6.திரு.ஏ.இராசேந்திரன் (எ) தீரன், சட்டமன்ற உறுப்பினர் | பா.ம.க. |
| 7.திரு.இலா.சந்தானம், சட்டமன்ற உறுப்பினர் | அ.இ.பா.பிளாக் |
| 8.திரு.ஜி.இராமகிருஷ்ணன் | இ.க.(மார்க்சிஸ்ட்) |
| 9.திரு.ஏ.எம்.கோபு | இ.க. |
| 10.திரு.பி.அய்யாக்கண்ணு | ஜனதாதளம் |
| 11.டாக்டர் வா.மைத்ரேயன் | பா.ஜ.க. |

ஊரக வளர்ச்சித் துறை செயலரின் வரவேற்புரையுடன் கூட்டம் துவங்கியது. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு என்னென்ன உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கலாம் என்று மாநில திட்டக்குழு பரிந்துரைத்து அளித்துள்ள அறிக்கையில் உள்ள 29 இனங்களில் 25 இனங்கள் மீது அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. அவ்வரசாணைகளை தொகுத்து அதன் நகல்கள் உறுப்பினர்களுக்கு கூட்டத்தில் வழங்கப்பட்டது. முதல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி உறுப்பினர்கள் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களை சந்தித்து இது குறித்து மனுக்களை பெற்று அம்மனுக்கள் மீது தங்கள் கருத்துக்களுடன் ஊரக வளர்ச்சி துறை செயலருக்கு அனுப்பி வைப்பது என்று முடிவு செய்தபடி எந்தவொரு உறுப்பினர்களுடமிருந்தும் கருத்துக்கள் பெறப்படவில்லை என்று குழு அமைப்பாளர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

மாவட்ட திட்டக் குழுத் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிக்கப்பட்டுள்ளதற்கு பதிலாக மாவட்ட ஊராட்சித் தலைவரையே மாவட்ட திட்டக்குழுவின் தலைவராக நியமனம் செய்வது குறித்தும் மற்றும் சிற்றூராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டங்களிலும் ஒன்றியக் குழு உறுப்பினர்கள் சிற்றூராட்சி மன்றக் கூட்டங்களிலும் ஒன்றியக் குழுத் தலைவர்கள் மாவட்ட ஊராட்சி மன்ற கூட்டங்களிலும், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் ஒன்றியக் குழு கூட்டங்களில் கலந்து கொள்ள வகை செய்ய வேண்டும் என்றும் உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் இவற்றிற்கு வழி வகை செய்யப்படவில்லை என்று இக்குழுவின் அமைப்பாளரும் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தெரிவித்தார். எனினும் இது குறித்து உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எழுத்து மூலம் தெரிவித்தால் அவற்றை இக்குழுவில் பரிசீலிக்கலாம் என்று இக்குழுவின் அமைப்பாளரும் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

சிற்றூராட்சிகளில் கிராம சபைகள் இதுவரை இயங்காதது குறித்து உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். கிராம சபை கூட்டங்களில் என்னென்ன சிரமங்கள் ஏற்படும் என்று இக்குழுவின் அமைப்பாளரும் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் குறிப்பிட்டார். எனினும் இது குறித்து குழு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை ஊரக வளர்ச்சித் துறை செயலருக்கு அனுப்பி வைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

மாநிலத் திட்டக்குழு ஊராட்சி அமைப்புகளுக்கு என்னென்னஅதிகாரங்கள் வழங்கலாம் என்று பரிந்துரை செய்துள்ள 29 இனங்களில் 25 இனங்கள் மீது அரசு ஆணைகள் வாயிலாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் ஒப்படைப்பு செய்துள்ளது. மேலும் என்னென்ன உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கலாம் என்பது குறித்து ஆய்வு செய்யலாம் என்று குழு முடிவு செய்தது. மாநிலத் திட்டக் குழு பரிந்துரைகளில் முதல் 5 இனங்களான (1) வேளாண்மை மற்றும் வேளாண்மை விரிவுபடுத்துதல். (2) நில சீர் திருத்தம் நில உச்சவரம்பு செயல்படுத்துதல் (3) சிறுபாசனம் - நீர்வளம் மேம்பாடு மற்றும் நீர்வள பாதுகாப்பு (4) கால்நடை, பால்பண்ணை மற்றும் கோழிப் பண்ணை (5) மீன்வளம் ஆகியவற்றின் மீது அரசு ஆணைகள் மூலம் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் போக மீதமுள்ளவற்றின் மீது குழு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை ஊரக வளர்ச்சித் துறை செயலருக்கு 20.4.98க்குள் அனுப்பிவைப்பது என்றும் அவற்றின் மீது 25.4.98க்கு பிறகு தொடர்ந்து கூட்டப்படும் கூட்டங்களில் விவாதிக்கலாம் என்று குழு முடிவு செய்தது. மீதமுள்ள இனங்களில் கண்டுள்ள பொருள்கள் குறித்து 30.4.98க்குள் உறுப்பினர்கள் தங்கள் கருத்தினை ஊரக வளர்ச்சிச் செயலருக்கு தெரிவிக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்.